செ.கு.எண்: 132 நாள்: 25.9.2011

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 25.9.2011

நேபாளத்தில் 19 சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற விமானம் சுற்றுலாவை முடித்துவிட்டு காத்மாண்டு விமான நிலையத்தை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கையில், மலையில் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து, விமானத்தில் பயணம் செய்த 19 சுற்றுலாப் பயணிகளும் பலியாயினர் என்ற செய்தி கேட்டு மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன். இந்த விமான விபத்தில் மரணமடைந்தவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்ற செய்தி எனக்கு மிகுந்த அதிர்ச்சியை அளித்துள்ளது.

இந்த விமான விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9